# OFFICE OF THE CHIEF ELECTORAL OFFICER

Villianur Main Road, Lawsthottam, Reddiarpalayam, Puducherry-605 010
Phone: (0413) 2292204, 2292205 / Fax: (0413) 2292206
Web: http://ceopuducherry.py.gov.in Email: ceo_pondicherry@eci.gov.in


எண் E.47/1/2026-Bye Election 2026 புதுச்சேரி, தேதி 07.09.2026

# பத்திரிகை செய்தி

இந்தியத் தேர்தல் ஆணையம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள **09. தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அட்டவணையை 07.09.2026 அன்று அறிவித்துள்ளது.** தேர்தல் அட்டவணை பின்வருமாறு:

| **வ. எண்.** | **நிகழ்வு** | **தேதி** |
|---|---|---|
| 1 | அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்படும் நாள் | 09.09.2026 (புதன்கிழமை) |
| 2 | வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 16.09.2026 (புதன்கிழமை) |
| 3 | வேட்பு மனுக்களை பரிசீலனை செய்வதற்கான இறுதி நாள் | 17.09.2026 (வியாழக்கிழமை) |
| 4 | வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் | 19.09.2026 (சனிக்கிழமை) |
| **5** | **வாக்குப்பதிவு நாள்** | **06.10.2026 (செவ்வாய்க்கிழமை)** |
| 6 | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 09.10.2026 (வெள்ளிக்கிழமை) |
| 7. | தேர்தல் நடைமுறைகள் முடிவுறும் கடைசி நாள் | 11.10.2026 (ஞாயிற்றுக்கிழமை |

## **மாதிரி நடத்தை விதிமுறை** (MODEL CODE OF CONDUCT)

- மாதிரி நடத்தை விதிமுறை இன்று (07.09.2026) முதல் உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், தேர்தல் நடைமுறைகள் முழுமையாக நிறைவடையும் நாள் (11.10.2026) வரை இது நடைமுறையில் இருக்கும்.

- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 02.01.2024 தேதியிட்ட கடித எண் 437/6/INST/ECI/FUNCT/MCC/2024/ (BYE ELECTIONS)-ன்படி, மாதிரி நடத்தை விதிமுறைகள் 09. தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் பொருந்தும்.

- மாதிரி நடத்தை விதிமுறைகள் அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து வேட்பாளர்கள், அரசு மற்றும் அரசு அலுவலர்கள்/ஊழியர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

- அரசியல் கட்சிகள் மாதிரி நடத்தை விதிமுறைகளைப் பின்பற்றி, பகைமை, விரோதம் மற்றும் கசப்புணர்வுக்கு இடமளிக்காத வகையில், சுதந்திரமான, நேர்மையான மற்றும் அமைதியான தேர்தல் நடைபெற முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- அரசியல் விளம்பரங்கள் இடம்பெற்றுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் பார்வைக்குப் படும்படியான எந்தவோர் இடத்தையும் மை, சுண்ணாம்பு, வண்ணப்பூச்சு அல்லது வேறு ஏதேனும் பொருளைக் கொண்டு எழுதுதல் அல்லது குறியிடுதல் மூலம் சிதைக்கக் கூடாது என பாண்டிச்சேரி பொது இடங்கள் (சிதைவு தடுப்பு) சட்டம், 2000 (The Pondicherry Open Places (Prevention of Disfigurement) Act, 2000 – POP(PD) Act, 2000)-ன் பிரிவு 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விதிமுறையை மீறுவது தொடர்பாக, சம்பந்தப்பட்ட இடங்களின் உரிமையாளர்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காவல்துறையும் இத்தகைய வழக்குகளைப் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளது.

- பொது இடங்களில் உள்ள விளம்பரங்கள் மற்றும் சுவர்/இடச் சிதைவுகளை அகற்ற அரசியல் கட்சிகள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- அரசு ஊழியர்கள் எந்தவோர் அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளனர். தவறு செய்யும் அரசு ஊழியர்களுக்கு எதிரான புகார்கள் கடுமையாகக் கையாளப்படும். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு எதிராக பணிவிதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 223-ன் கீழ் குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

- தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படும் காவல்துறையினர் உட்பட அனைத்து அலுவலர்கள்/பணியாளர்களும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணிக்கு அனுப்பப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, எவ்வித அச்சமோ அல்லது பாரபட்சமோ இன்றி நடுநிலையான முறையில் தங்களது கடமைகளை ஆற்ற வேண்டும். அவர்களின் பணித்திறன் தேர்தல் ஆணையத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

## வாக்காளர் பட்டியல்கள் (ELECTORAL ROLLS)

- 01.01.2026 தேதியை தகுதி நாளாகக்கொண்டு இறுதி வாக்காளர் பட்டியல் 14.02.2026 அன்று வெளியிடப்பட்டது. இருப்பினும், வாக்காளர் பட்டியலைத் தொடர்ந்து புதுப்பிக்கும் பணியானது, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் வரை தொடரும். 01.07.2026-க்குள்18 வயது நிறைவடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள், வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கு 10 நாட்களுக்கு முன்பு வரை பரிசீலிக்கப்படும்.

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகித சோதனை சாதனங்கள் (VVPATs)

- போதுமான எண்ணிக்கையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் சரிபார்ப்பு காகித சோதனை சாதனங்கள் (VVPATs) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இம்மின்னணு இயந்திரங்களின் உதவியுடன் வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வாக்குப்பதிவின்போது அடையாளச் சான்று

- வாக்காளரின் அடையாளத்தை உறுதி செய்வதற்கான முக்கிய ஆவணமாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) இருக்கும். எனினும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கீழ்க்கண்ட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றையும் வாக்குச்சாவடியில் காண்பிக்கலாம்:
  - ஆதார் அட்டை;
  - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (MGNREGA) பணி அட்டை;
  - வங்கி / அஞ்சலகத்தால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய கணக்குப் புத்தகங்கள்;
  - தொழிலாளர் அமைச்சகத்தின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுகாதாரக் காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை / ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டை;
  - ஓட்டுநர் உரிமம்;
  - PAN அட்டை;
  - NPR-ன் கீழ் இந்தியப் பதிவாளர் ஜெனரலால் (RGI) வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை;
  - இந்தியக் கடவுச்சீட்டு;
  - புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்;

- மத்திய / மாநில அரசு / பொதுத்துறை நிறுவனங்கள் (PSUs) / பொதுப் பங்கு நிறுவனங்கள் (Public Limited Companies) தங்களது ஊழியர்களுக்கு வழங்கிய புகைப்படத்துடன் கூடிய பணியாளர் அடையாள அட்டைகள்;
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MPs) / சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) / சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் (MLCs) ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ அடையாள அட்டைகள்; மற்றும்
- இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவ மாற்றுத்திறனாளி அடையாள அட்டை (UDID Card).

## குற்றப் பின்னணி தொடர்பான தகவல்கள் (INFORMATION REGARDING CRIMINAL ANTECEDENTS)

- குற்றப் பின்னணி கொண்ட வேட்பாளர்கள், அது தொடர்பான தகவல்களைத் தேர்தல் பிரச்சாரக் காலத்தில் மூன்று முறை நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் வெளியிட வேண்டும்.
- குற்றப் பின்னணி கொண்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் அரசியல் கட்சிகளும், பின்வரும் மூன்று சந்தர்ப்பங்களில் அதுகுறித்த தகவல்களைத் தொலைக்காட்சிகள் மற்றும் நாளிதழ்களில் வெளியிட வேண்டும்:
  - வேட்புமனு திரும்பப் பெறப்பட்ட முதல் 4 நாட்களுக்குள்;
  - அடுத்த 5 முதல் 8 நாட்களுக்கு இடையில்;
  - 9-ஆம் நாள் முதல் தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாள் வரை (வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய இரண்டாவது நாள் வரை).
- மேலும், குற்றப் பின்னணி கொண்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்ததற்கான காரணங்களையும், அத்தகைய வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்திற்குள் நாளிதழ்களிலும், அரசியல் கட்சிகளின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக தளங்களிலும் இணையதளங்களிலும் வெளியிட வேண்டும்.

## நிலுவைத் தொகை இல்லை என்பதற்கான சான்றிதழ் (NO DUES CERTIFICATE)

- தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதிக்கு முந்தைய கடந்த 10 ஆண்டுகளில் எந்தவொரு காலகட்டத்திலாவது அரசால் வழங்கப்பட்ட குடியிருப்பு வசதியைப் பயன்படுத்தியுள்ள, தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர் ஒருவர் அணுகினால், அவருக்கு "நிலுவைத் தொகை இல்லை என்பதற்கான சான்றிதழ் (No Due Certificate)" வழங்குவதற்கு ஏதுவாக, பின்வரும் கட்டணங்கள்

தொடர்பாகக் கையாளும் நிறுவனங்கள் / அதிகாரிகள் / துறைகளிடமிருந்து அச்சான்றிதழைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது:

(a) வாடகைத் தொகை;

(b) மின்சாரக் கட்டணம்;

(c) குடிநீர்க் கட்டணம்; மற்றும்

(d) தொலைபேசிக் கட்டணம்.

- இதுதொடர்பான அறிவுறுத்தல்கள், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் **03.05.2026 தேதியிட்ட கடித எண் 3/ER/2023/SDR/Vol.IV-**ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வறிவுறுத்தல்கள் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலும் கிடைக்கின்றன.

## உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் (ASSURED MINIMUM FACILITY)

- அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்வுதளங்கள் (Ramps), மின்சார வசதி, தனிக் கழிப்பறைகள், நிழற்குடைகள், அணுகக் கூடிய சாலைகள் உள்ளிட்ட அடிப்படை குறைந்தபட்ச வசதிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிகளுக்கான கூடுதல் வசதிகள் (ADDITIONAL FACILITIES FOR PWDs)

- அனைத்து வாக்குச்சாவடிகளும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்களுடன் இணைக்கப்பட்டு (mapped) வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- உடல் இயக்கக் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் தேவைக்கேற்ப உயரத்தை மாற்றியமைக்கக்கூடிய மேசைகள் போன்ற வசதிகள் வழங்கப்படும்.
- பார்வைக் குறைபாடு, செவித்திறன் குறைபாடு மற்றும் பேச்சுக் குறைபாடு கொண்ட வாக்காளர்களுக்கு உதவுவதற்காக, சிறப்புப் பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் பணியில் அமர்த்தப்படுவார்கள்.
- பார்வைக் குறைபாடு கொண்ட வாக்காளர்களின் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பிரெயில் வாக்குச்சீட்டுகள் வைக்கப்படும். மேலும், அவர்கள் விரும்பினால் ஒரு துணையாளரை உடன் அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

- மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் உதவி பெறுவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் சாக்ஷம் செயலி (Saksham App) உருவாக்கப்பட்டுள்ளது.

- மாணவ தன்னார்வலர்கள், மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் கோரிக்கையின் பேரில், வாகனங்களில் அவர்களை வீட்டிலிருந்து வாக்குச்சாவடிக்கு அழைத்துச் செல்வது முதல், வாக்குப்பதிவு முடிந்த பின்னர் மீண்டும் வீட்டிற்கு அழைத்துச் செல்வது வரை தனிநபர் அடிப்படையிலான (one-to-one) சேவையை வழங்குவார்கள்.

## சேவை வாக்காளர்கள் / தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்களின் வாக்குப்பதிவு

- அனைத்து 13 சேவை வாக்காளர்களுக்கும் (Service Voters) மின்னணு பரிமாற்ற அஞ்சல் வாக்கு முறை (**ETPBS – Electronically Transmitted Postal Ballot System**) மூலம் வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும்.

## புகார் தீர்வு அமைப்பு – அழைப்பு மையம் (COMPLAINT REDRESSAL MECHANISM – CALL CENTER)

- புதுச்சேரியில் மாநில / மாவட்ட தொடர்பு மையம் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950 மூலம் நிறுவப்பட்டுள்ளது.

- தேர்தல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்வதுடன், பல்வேறு தேர்தல் சேவைகளைப் பெறுவதற்கான ஒற்றைத் தொடர்பு மையமாக 1950 செயல்படும்.

- வாக்காளர்கள் voters.eci.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து, தங்களது வரிசை எண் (Sl. No.), பாகம் எண் (Part No.), வாக்குச்சாவடியின் அமைவிடம் மற்றும் தங்களது வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO)-ன் தொடர்பு விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

- இணையவழி புகார்களையும் NGSP Portal மூலம் பதிவு செய்யலாம்.

**ASPS. ரவிப்பிரகாஷ், இ.ஆ.ப.,**
**தலைமைத் தேர்தல் அதிகாரி**